# சேனைமுனைவில்

செய்திமடல்

ஜூலை 2011 - ஜனவரி 2012 | மடல் - 02



பிரதேச செயலகம்
அட்டாளைச்சேனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cultural Unit
Divisional Secretariat,
Addalaichenai.
Tel: 067-2277336
Fax : 067-2279213
E-mail: addscultural@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போசகர்:**

**ஜனாப். ஐ.எம். ஹனிபா**

*பிரதேச செயலாளர்*

**பிரதம ஆசிரியர்:**

**ஜனாப். ஏ.எச். அஹமட் அம்ஜத்**

*கலாசார உத்தியோகத்தர்*

**இணை ஆசிரியர்கள்:**

**ஜனாப். எம்.எஸ். ஜஃபர்**

*கலாசார நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்*

**ஜனாப். ரீ.எம். றின்ஸான்**

*கலாசார அபிவிருத்தி உதவியாளர்*

**வெளியீடு:**

கலாசாரப் பிரிவு

பிரதேச செயலகம்

அட்டாளைச்சேனை.

தொ.பே: 067-2277336

பெக்ஸ்: 067-2279213

மின்னஞ்சல்: addscultural@gmail.com

இம்மடலில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் தகவல்களுக்கும் எழுதியவர்களே பொறுப்புடையவர்கள்.

## சேனைமுனைவிலிருந்து.....

அட்டாளைச்சேனை பிரதேச செயலக கலாசாரப்பிரிவு வெளியிடுகின்ற **"சேனைமுனைவில்"** செய்தி மடல் இரண்டாவது வெளியீடு உங்களது கைகளில் கிடைப்பதற்கு வாய்ப்பளித்த இறைவனுக்கே புகழனைத்தும்.

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் நடைபெறுகின்ற அரச நிருவாகத்தின் அபிவிருத்திப் பணிகளை, சேவைகளை செய்திக் குறிப்புக்களாக, தகவல் கையேடாக இம்மடலை வடிவமைத்துள்ளோம்.

ஒரு பொது நிறுவனம் அதன் சேவைகளைப் பெறுகின்ற பயனாளிகளான பொதுமக்களுக்கு சேவை வழங்கல் பற்றி தெளிவுபடுத்துகின்ற போது, அவற்றை பகிரங்கப்படுத்துகின்ற போது அது அந்நிறுவனத்தின் வெளிப்படைத் தன்மையை (Transparency) எடுத்துக்காட்டுகின்றது. இது நல்லாட்சியின் அடையாளமுமாகும். இதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையில் **"சேனைமுனைவில்"** பொதுமக்களுக்கும் எமது உத்தியோகத்தர்களுக்கும் களம் அமைத்துள்ளது. மட்டுமல்லாமல் உத்தியோகத்தர்களின் எழுத்தறிவு ஆற்றலை வளர்ப்பதற்கான சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இம்மடல் ஒரு சில புதிய முகங்களை அடையாளப் படுத்தியுள்ள போதிலும் குறிப்பிட்ட சிலரே இம்மலருக்காக தொடர்ந்தும் தமது ஆக்கங்களை வழங்கி வருகின்றனர். குறைந்த வளங்களோடு வெளிவருகின்ற இம்மடலின் ஆக்கங்களை விடயப்பரப்புக்களை விரிவுபடுத்தப்படுத்தி புதிய எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தவும் விரும்பு கின்றோம். எமது அடுத்த மடலில் நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்.

~ பிரதம ஆசிரியர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



**ஐ.எம். ஹனிபா**
பிரதேச செயலாளர்,

அட்டாளைச்சேனை பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் வெளியிடப்படுகின்ற "சேனைமுனைவில்" செய்திமடல் இரண்டாவது வெளியீட்டிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பிரதேச செயலகங்கள் அரசாங்கத்தின் கொள்கை களுக்கு திட்டங்களுக்கு செயல்வடிவம் கொடுத்து அதன் வெளியீடுகள் மூலம் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சேவையாற்றிவருகின்றன. அந்தவகையில் பிரதேசசெயலகங்களின் இப்பணிகளை பொதுமக்கள் காலடியில் கொண்டு செல்வதில் பொதுமக்களுக்கான சேவைவழி காட்டல்கள் தெளிவுகளை வழங்குவதில் "சேனைமுனைவில்" பெரும்பங்களிப்புச் செய்கின்றது. எனவேதான் இச்செய்திமடலை மக்கள் மத்தியில் விழிப்புணர்வுகளையும் நல்லபிப்பிராயங்களையும் ஏற்படுத்துகின்ற ஊடகமாக முன்வைக்கின்றேன்.

அட்டாளைச்சேனை பிரதேசத்தின் பிரதேச செயலாளராக கடமையேற்றகையோடு இப்பணியில் நானும் இணைந்து கொள்வதில் பெருமையடைகின்றேன். இச்செய்திமடல் வெளியீட்டுப் பணியை ஆரம்பித்து முதலாவது மடலை வெளியீட்டு வைத்த முன்னாள் பிரதேச செயலாளர் அல்ஹாஜ் எம்.எம். நஸீர் உதவிப் பிரதேச செயலாளர் ஜனாப் ஏ.எம். அப்துல் லதீப் ஆகியோருக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இச்செய்திமடலை வெளியிடுகின்ற எமது பிரதேச செயலக கலாசாரப் பிரிவின் பணிகள் பாராட்டத்தக்கவைகளாகும். கடமைப்பட்டியலுக்கும் சுற்று நிருபங்களுக்கும் மேலதிகமாக மேற்கொள்ளப்படுகின்ற இவ்வர்ப்பணிப்புக்கள் முன்னுதாரணமான கடமையுணர்வுகளாகும்.

எதிர்காலத்தில் இச்செய்திமடல் தொடர்ச்சியாக வெளிவருவதற்கும் அதன் வளர்ச்சிக்கும் எனது அர்ப்பணிப்புகளையும் உதவிகளையும் வழங்குவதற்கு வாய்ப்பளிக்க இறைவனை பிராத்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவு
# அறிமுகக் குறிப்புக்கள்

**அ**ட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவு **அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், தீகவாபிய** ஆகிய நான்கு கிராமங்களை உள்ளடக்கிய 94.5 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்புள்ள பிரதேசமாகும்.

அம்பாரை மாவட்டத்தின் கிழக்குக் கரையோரத்தில் கடலும் கடல்சார்வளமும், மேற்கே வயலும் வயல்சார்ந்த விவசாய நிலங்கள் சூழ்ந்தும் பிரதேசத்தின் நடுவே கோணாவத்தை ஆறும் ஓடுகின்ற எழில் மிகு பிரதேசமாகும்.

வடக்கே களியோடை ஆறும் தெற்கே அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவும் கிழக்கே வங்காள விரிகுடாவும் மேற்கே தமண இறக்காமம் சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவுகளின் எல்லைகளாக இப்பிரதேசம் அமைந்துள்ளது.

**அட்டாளைச்சேனை** பிரதேசம் மீனோடைக் கட்டு, கோணாவத்தை வடக்கு (LDO), கோணாவத்தை தெற்கு (றகுமானியாபாத்), தைக்காநகர் (தைக்காவடி), முல்லைத்தீவு (மீலாத் நகர்),சம்புநகர்,ஆலம்குளம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய 17 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை கொண்டுள்ளது.

**பாலமுனை** பிரதேசம் சின்னப்பாலமுனை, உதுமாபுரம், ஜலால்புரம், ஹுஸைனியா நகர், திராய்க்கேணி ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய 6 கிராமஉத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

**ஒலுவில்** பிரதேசம் அஸ்ரப்நகர் கிராமத்தை உள்ளடக்கிய 07 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை கொண்டமைந்துள்ளது.

**தீகவாபிய** பிரதேசம் 02 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கியதாக இப்பிரதேசம் அமைந்துள்ளது.

அட்டாளைச்சேனை கிராமசேவகர் பிரிவில் 23746 மக்கள் தொகையையும் பாலமுனை கிராம சேவகர் பிரிவில் 8841 மக்கள் தொகையையும் ஒலுவில் கிராம சேவகர் பிரிவில் 8919 மக்கள் தொகையையும் தீகவாபிய கிராம சேவகர் பிரிவில் 2008 மக்கள் தொகையையும் சனத்தொகையை அடர்த்தியாக கொண்டுள்ளது.

இப்பிரதேச செயலாளர் பிரிவில் 41,063 (10364 குடும்பம்) முஸ்லிம்களும், 2008 (612 குடும்பம்) சிங்களவர்களும், 443 (120 குடும்பம்) தமிழர்களும் வாழ்கின்றனர்.

விவசாய வளம் அதிகமாக காணப்படும் இப்பிரதேசத்தில் நெற்செய்கை, சிறு விவசாயப் பயிர்ச்செய்கை மீன்பிடி, சிறு கைத்தொழில் என்பன பிரதான தொழில் முயற்சிகளாக காணப்படுவதோடு அரச தொழில் துறையிலும் அதிகமானோர் ஈடுபட்டுள்ளனர்.

நெற்காணிகளுக்கான நீர்ப்பாசனம் சேனநாயக்க சமுத்திரத்தில் இருந்தும் கல்லோயா வலதுகை வாய்க்கால் மூலமும் பெறப்படுகின்றது. பெரிய நீர்ப்பாசன மூலமாக 8830 ஏக்கர் நிலப்பரப்பிலும் மானாவரி மூலமாக 8340 ஏக்கர் நிலப்பரப்பிலும் நெல் பயிரிடப்படுகிறது. அத்தோடு உபஉணவுப்பயிர்கள் 490 ஏக்கரிலும் தெங்கு 510 ஏக்கர் நிலப்பரப்பிலும் செய்கை பண்ணப்படுகிறது.

இப்பிரதேச செயலகப் பிரிவில் கடலை அண்டிய அட்டாளைச்சேனை பாலமுனை, ஒலுவில், பிரதேசங்களில் பாரியளவில் கடல்மீன்பிடித்தொழில் நடைபெறுவதோடு களியோடை, கோணாவத்தை போன்ற ஆற்றுப் பிரதேசங்களிலும் வயலை அண்டிய சதுப்பு நில மற்றும் களப்புப் பிரதேசங்களில் நன்னீர் மீன்பிடியிலும் சிலர் ஈடுபடுகின்றனர். மேலும் கருங்கல் உடைத்தல், செங்கல் உற்பத்தி நடைபெறுவதோடு தச்சுத்தொழில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் அரிசிஆலைகளும் உள்ளதோடு ஆடு, மாடு, கோழி போன்ற கால்நடைகளும் வளர்க்கப்படுகின்றன.

இப்பிரதேசசெயலாளர் பிரிவில் தேசிய பாடசாலை(1AB) – 01, 1C பாடசாலைகள் - 03, II ம் தரப்பாடசாலை – 08, III ம் தரப்பாடசாலை – 11 மொத்தமாக 23 பாடசாலைகள் உள்ளன. அத்தோடு இப்பிரதேசத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், தேசிய கல்வியியல் கல்லூரி, அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை கிழக்கிலங்கை அறபுக்கல்லூரி ஆகியன அமைந்துள்ளதால் மேற்படிப்புத்துறையிலும் அரசதொழில் துறையிலும் அதிகம் ஆர்வம் காட்டப்படுகின்றது.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் இப்பிரதேசத்தில் 55 பள்ளிவாயல்களும், 02 விகாரைகளும், 02 கோயில்களும், 40 குர்ஆன் மத்ரசாக்களும், 02 ஆண்கள் அறபுக்கல்லூரியும் 02 பெண்கள் அறபுக்கல்லூரியும் சமய ரீதியாக ஆண்மிக ஒழுக்கப் பண்பாட்டு வளர்ச்சியில் பங்களிப்புக்களை வழங்கி வருகின்றன.

இப்பிரதேச மக்களின் தேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக பின்வரும் நிறுவனங்கள் திணைக்களங்கள் சேவைகளை வழங்கிவருகின்றன.

- பிரதேச செயலகம்
- பிரதேச சபை
- சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம்
- அரசாங்க தனியார் வைத்தியசாலைகள்
- ஆயுர் வேத வைத்தியசாலை
- ஹோமியோபதி வைத்தியசாலை
- பிரதேச கல்வி அலுவலகம்
- அரசாங்க பாடசாலைகள்
- தனியார் ஆங்கிலப் பாடசாலைகள்
- தென்கிழக்குப்பல்கலைக்கழகம்
- தேசிய கல்விக் கல்லூரி
- அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை
- கிழக்கிலங்கை அறபுக்கல்லூரி
- மக்கள் வங்கி
- இலங்கை வங்கி
- சமூர்த்தி வங்கிச் சங்கம்
- சமூக பராமரிப்பு நிலையம்
- மகாபொல பயிற்சி நிலையம்
- ஒலுவில் துறைமுகம்
- தபால் நிலையங்கள்
- உபதபால் நிலையங்கள்
- விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் காரியாலயம்
- விவசாய போதனாசிரியர் காரியாலயம்
- உதவி விவசாய பணிப்பாளர் காரியாலயம்
- கிராமிய தொழில் பயிற்சி நிலையம்
- கிராமிய அதிகார திணைக்களத்தின் தொழில்பயிற்சி நிலையங்கள்
- சிறுகைத்தொழில் திணைக்களத்தின் தொழில்பயிற்சி நிலையங்கள்
- தேசிய தொழில் பயிலுனர் சபையின் தையல் பயிற்சி நிலையம்
- விதாதா வள நிலையம்
- கூட்டுறவு வியாபார நிலையம்
- அரச சார்பற்ற நிறுவனங்கள்
- கரையோர வீதி அபிவிருத்தி திணைக்களம்
- அரச கால்நடை வைத்திய காரியாலயம்
- இலங்கை மின்சார சபை
- தேசிய நீர் வழங்கள் வடிகாலமைப்பு சபை

**ஏ.எச். அஹமட் அம்ஜத்**



ஆரம்பப்பராய சிறுவர் அபிவிருத்தி வார நிகழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான அறிவுறுத்தல்

**16** வயதுக்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜைகள் யாராயினும் தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்ளாது இருப்பின் அவர்கள் அடையாள அட்டை பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

- பிறப்புச்சான்றிதழ் இல்லாதபட்சத்தில் விண்ணப்பதாரி 50 வயதுக்குட்பட்டவராயின் உத்தேச வயதுப் பத்திரம் அத்தியவசிய மாகும். 50 வயதை தாண்டியவராயின் உத்தேச வயதுப் பத்திரத்துடன் அல்லது தேடுதல் விளைவுச்சான்றிதழுடன், முழுப் பெயர், பிறந்த திகதி என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக கீழ் குறிப்பிடப்படும் ஆவணங்களில் இரண்டுடன் ஏற்றுக்கொள்ளத்தக்க சத்திய கடதாசியும் இணைக்கவும்.

I. விண்ணப்பதாரியின் முழுப் பெயர், பிறந்த திகதி என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக பிள்ளையின் பிறப்புச்சான்றிதழ்

II. பாடசாலை விலகல் சான்றிதழ்

III. கடவுச்சீட்டு

- வெளிநாடு ஒன்றில் பிறந்தவராயின் அரச பாதுகாப்பு அமைச்சின் மூலம் வழங்கப்பட்ட பிரஜா உரிமைச்சான்றிதழுடன் கீழ்வரும் ஆவணங்களில் இரண்டில் ஒரு ஆவணத்தை நிழற் பிரதியுடன் சமர்ப்பிக்கவும்.

I. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியுலர் கிளையில் அல்லது பதிவாளர் நிறுவகத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்புச்சான்றிதழ்

II. குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட CTI சான்றிதழ்

- அடையாள அட்டைக்காக புகைப்படம் எடுக்கும் போது இடது பக்க காதும் உடலின் மேற்பகுதியும் தென்பட வேண்டும். சீருடையுடன் கூடிய புகைப்படங்களை பாடசாலை விண்ணப்பதாரிகள் மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.

- 20 வயதுக்கு மேற்பட்டோர் முதல் தடவையாக அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்கும் போது இதுவரை காலமும் அடையாள அட்டை பெறவில்லை என்பதற்கான கடிதத்தை கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலாளர் என்போரால் உறுதிப்படுத்தல். 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் முதல் தடவையாக விண்ணப்பிப்பதாயின் ஒரு நாள் சேவைக்கு சமர்ப்பிக்க முடியாது.

- இணைப்பிரதி அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்கும் போது பழைய அடையாள அட்டையின் நிழற் பிரதியையோ அல்லது அடையாள அட்டை இலக்கம் குறிப்பிடப்பட்ட ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணத்தின் புகைப்படப் பிரதியை சமர்ப்பிக்கவும்.

- இணைப்பிரதி விண்ணப்பங்களுடன் ஒரு வருட காலத்தினுள் பெற்றுக்கொண்ட பொலிஸ் அறிக்கையின் மூலப் பிரதியை இணைக்கவும்.

- திருத்தத்திற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும்போது ஏதேனும் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டுமாயின் எழுத்து மூலமாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். முகவரியைத் தவிர அனைத்து திருத்தத்திற்கான விண்ணப்பப் படிவங்களுடனும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதியை இணைக்க வேண்டும். பழைய அடையாள அட்டையின் இலக்கத்தை வாசிக்க முடியாவிட்டால் இலக்கத்தை உறுதி செய்வதற்காக எழுத்து மூலமான ஆதாரத்துடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் மூலப்பிரதியையும் இணைக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


- விண்ணப்பதாரி ஒரு நோயாளியாயின் அல்லது ஊனமுற்றவராயின் அல்லது பரீட்சகராயின் (ஒரு நாள் சேவைக்காக விண்ணப்பிப்பவர்கள்) இவ்வாறான சந்தர்ப்பத்தில் அவர்களது நெருங்கிய உறவினர்களுக்கு (தாய், தந்தை, கணவன், மனைவி, சகோதரர், சகோதரர் பிள்ளை) மட்டுமே ஒரு நாள் சேவைக்காக விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியும் அவர் தனது உறவு முறையை உறுதி செய்யும் ஆவணங்களை கொண்டு வரவேண்டும். (தேசிய அடையாள அட்டையுடன் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், திருமணப்பதிவு)

- திருத்தத்திற்கான அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் போது பழைய அடையாள அட்டையின் பெயர், புகைப்படம், அடையாள அட்டையின் இலக்கம் போன்றன விண்ணப்பதாரியினுடையது என உறுதிப்படுத்த முடியுமாயின் ஒரு நாள் சேவையில் சமர்ப்பிக்க முடியும்.

- மேலதிக தகவல்களை பிரதேச செயலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**எம்.ஏ.சீ.ஏ. மஸ்ஹூர் JP**
**முகாமைத்துவ உதவியாளர் I**

## அல் - குர்ஆன் சமய பாடசாலைகளுக்கான அபிவிருத்திச் செயற்பாடுகள்



அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் இயங்கி வரும் அல்குர்ஆன் மத்ரசாக்களை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதன் முதற் கட்டமாக இப்பிரதேசத்தில் இயங்கி வரும் குர்ஆன் மத்ரசாக்களின் தகவல் திரட்டும் பணியும், பதிவு செய்யப் படாத மத்ரசாக்களை பதிவு செய்வத ற்கான ஆரம்ப நடவடிக்கைகளும் நடை பெற்று வருகின்றது. இது தொடர்பாக அறிவுறுத்து கின்ற கலந்துரையாடல்கள் கடந்த நவம்பர் மாதம் 02ம், 30ம் திகதிகளில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வுகளில் ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை பிரதேச மத்ரசாக்களின் முஅல்லிம்கள் மற்றும் முஅல்லிமாக்கள் கலந்து கொண்டனர்.

பிரதேச மத்ரசாக்களை ஒன்றிணைத்து செயற் படுவதற்காக சகல முஅல்லிம்களையும் பிரதிநிதிப்படுத்தும் "பிரதேச மத்ரசாக்கள் ஒன்றியம்" அமைக்கப் படவுள்ளதோடு அதனூடாக குர்ஆன் மத்ரசா மாணவர்களின் கல்வி அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இப்பிரதேசத்தில் உள்ள 40 மத்ரசாக்களில் சுமார் 2226 மாணவர்கள் சமய கலாசார கல்வியை கற்பதோடு சுமார் 49 முஅல்லிம்களும் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**கலாசார உத்தியோகத்தர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சர்வதேச முதியோர் சிறுவர்கள் தின விழா – 2011

## நிகழ்வுகள்

- ❖ முதியோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக சமூகத் தலைவர்களுக்கும் சமூகத்துடன் இணைந்து கடமையாற்றும் சமூர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள் சுகாதார உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு விழிப்பூட்டல் கருத்தரங்கு நடத்தப்பட்டது.
- ❖ பொதுமக்களை விழிப்பூட்டும் 3 பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டது.
- ❖ முதியோர்களின் முக்கியத்துவம் முதியோரை மதித்தல் தொடர்பாக பாடசாலைகளில் மாணவர்களுக்கான காலைஒன்றுகூடலின் போது உபதேசிக்கப்பட்டது.
- ❖ இப்பிரதேசத்தில் உள்ள பராமரிப்பற்ற 64 பேர் தெரிவு செய்யப்பட்டு தொண்டர் நிறுவனங்களின் நிதி உதவியுடன் 8000/- ரூபா பெறுமதியான ஆடைகள் வழங்கப்பட்டது.
- ❖ முதியோர்களினால் பராமரிக்கப்படும் 75 சிறுவர்களுக்கு யுனிசெப் நிறுவனத்தின் நிதிஉதவியுடன் ஆடைகள் வழங்கப்பட்டது.
- ❖ முதியோர் சிறுவர்கள் தின பிரதான விழா – 2011 நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதியோர், சிறுவர்கள் கௌரவிக்கப் பட்டதோடு அன்பளிப்புக்களும் வழங்கப்பட்டன. சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் முதியோர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டதுடன் முதியோர் குழுக்களுக்கான பதிவுச்சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. அத்துடன் சிறுவர்கள், முதியோர்கள் தொடர்பான மார்க்கச் சொற்பொழிவும், சிறுவர்கள் முதியோர்கள் உளவளத்துணை தொடர்பான கருத்துரைகளும் நிகழ்த்தப்பட்டது.

சமூக சேவைப் பிரிவு



**வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சமூக சேவை**

படம்: றீ.கே.றஹ்மத்துல்லா SDO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PUBLIC FINANCIAL MANAGEMENT

Managing finance is a critical function of management in any organization especially in government sector. The public finance means that collection of sufficient resources from the economy in the appropriate manner and allocation and uses the resources in the efficient and effective ways that must ensure public benefits as well as economic growth.

The PFM is an essential function in the government sector. PFM includes resource mobilization, prioritization of programmers, the budgetary process, efficient management of resources and exercising controls. Rising aspirations of people are placing more demands on financial resources. At the same time, the emphasis of the citizenry is on value for money, thus making public finance management increasingly vital.

The manager at government sector must take two major financial decisions: government expenditure and revenue, for every year with keeping the main objectives of government policy, economic growth and public benefits. The expenditure management at any organization must ensure the expected returns from the particular expenditure. This is not exemption for the public sector also. The expenditure at government sector could be divided into three main parts

1. Operational expenditure: - The government spends money for purchasing goods and service to current consumptions. This is known government consumptions. This kind of expenditure at limited level contributes for the future economic growth.
2. Government investments: - The government purchases goods and services for future economic development. Infrastructure, research etc.
3. Money Transfer: - The government does not purchase any goods or services but transfer money for social needs. Pension payments, Public Assistance Monthly Allowance, Disability Payments etc

In Sri Lanka, the Public Financial Managers or Authorized People must spend money for any purpose within financial regulation and other related circulars released by the relevant departments.

The government finances the above expenditure from the following source of funds

1. Tax: - The government imposes direct and indirect taxes for earning money from public. Taxation is the main part of modern public finance. The main objective of taxation is raising revenue. A high level of taxation is necessary in a welfare State to fulfill its obligations. Taxation in a modern Government is thus needed not merely to raise the revenue required to meet its ever-growing expenditure on administration and social services but also to reduce the inequalities



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

of income and wealth. Taxation is also needed to draw away money that would otherwise go into consumption and cause inflation to rise.

2. Government borrowing: - The government borrowing is another source of financing method. The government could take out loan by issuing treasury bonds, security etc from private sectors and abroad countries. Most of countries prepare deficit budget because they plans for future economic developments. The budget deficit is mostly fulfilled through the borrowing therefore the borrowing is an essential for economic development.

3. Other revenue

In Sri Lanka, the central government could collect impose or collect any revenue from public based parliament act but the provincial council, municipal council, urban council and Pradesh Shaba also collect revenue within theirs relevant ruling areas.

A.L.M.Najimudeen
Accountant
Divisional Secretariat,
Addalaichenai

**எமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றி சேவையில் இருந்து இளைப்பாறிய உத்தியோகத்தர்களை பாராட்டுகிறோம்**



பெயர் : ஜனாப் PMA காதர்
பதவி : கிராம உத்தியோகத்தர் தரம் I
முதல் நியமனம்: 21.09.1981 (விசேட சேவை உத்தியோகத்தர்)
கிராம உத்தியோகத்தர் நியமனம் : 1987.06.01
ஓய்வு : 01.11.2011



பெயர் : ஜனாப் UL. முகைதீன்
பதவி : கிராம உத்தியோகத்தர் தரம் I
முதல் நியமனம்: 1978.06.01 (விவசாய உத்தியோகத்தர் CO)
கிராம உத்தியோகத்தர் நியமனம் : 1989.01.20
ஓய்வு : 15.11.2011



பெயர் : ஜனாப் ILH அச்சிமுகம்மட்
பதவி : கிராம உத்தியோகத்தர் தரம் II
முதல் நியமனம்: 1981.09.21 (விசேட சேவை உத்தியோகத்தர்)
கிராம உத்தியோகத்தர் நியமனம் : 1987.06.01
ஓய்வு : 01.11.2011



பெயர் : ஜனாப் AL இப்றாலெவ்வை
பதவி : அலுவலக பணியாளர் தரம் III
முதல் நியமனம் : 01.11.1999
ஓய்வு : 23.07.2011

கே.எம்.எம். அன்சார்
முகாமைத்துவ உதவியாளர் I



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப் பட்டுள்ள கலை மன்றங்களுக்கான ஒன்று கூடல்கள் 2011.11.14,15,16,17ம் திகதிகளில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட கலை மன்றங்களுக்கான ஒன்றுகூடல் 2011.11.14,15ம் திகதிகளிலும் அம்பாறை மாவட்டத்தின் கலை மன்றங்களுக் கான ஒன்றுகூடல் 2011.11.16ம்,17ம் திகதிகளிலும் அவ்வப் பிரதேச செயலகங்களில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் இயங்கி வரும் மன்றங்க ளுக்கான ஒன்றுகூடல் 16.11.2011ம் திகதி பி.ப 3.30 தொடக்கம் 5.30 மணிவரை பிரதேச செயலக மண்டபத்தில் கலாசார உத்தியோகத்தர் ஜனாப் ஏ.எச்.அஹமட் அம்ஜத் தலைமையில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேசத்தின் அட்டாளைச்சேனை பாலமுனை, ஒலுவில் கிராமங்களைச் சேர்ந்த ஒன்பது கலை இலக்கிய கலாசார மன்றங்களின் தலைவர் செயலாளர் உறுப்பினர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் MM. நஸீர், கிழக்குமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு DWU. வெலிக்கள ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அட்டாளைச்சேனை பிரதேச கலை மன்றங்களுக்கான ஒன்றுகூடல்

*கலாசார உத்தியோகத்தர்*

இவ் ஒன்று கூடலுக்கு தலைமை வகித்த கலாசார உத்தியோகத்தர் தனது தலைமை உரையில் இப்பிரதேசத்தில் இயங்கி வருகின்ற மன்றங்கள் படைப்பிலக்கியம், ஆக்க இலக்கியம், சமய கலாசார பண்பாடுகள், ஊடாக கலாசார இலக்கியத்துறைக்கு பங்களிப்புச் செய்து வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும். ஏழு மன்றங்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள தாகவும் ஒரு மன்றம் பதிவுக்காக ஆவணங்களை சமர்ப்பித்துள்ள தாகவும், மற்றும் ஒரு மன்றம் இதுவரையில் பதிவின்றி இயங்கி வருவதாகவும் மொத்த மாக ஒன்பது மன்றங்கள் செயற்படுவதாக குறிப் பிட்டார்.

மூன்பிறைட், "ஸ்ம்ஸ்",றியாழுல் ஜென்னாஹ், தென்கிழக்கு நுண்கலை மன்றம், பாலமுனை கலாமன்றம், கவிதாலய இலக்கிய மன்றம், முஸ்லிம் ஐக்கிய ஒன்றியம், சுதந்திர கலாசார ஒன்றியம், மின்னல் இலக்கிய மன்றம் ஆகிய மன்றங்கள் இயங்கி வருகின்றன.

மேற்படி மன்றங்களில் சில தனியாக இயங்குவதாகவும் மற்றும் சில பிரதேச செயலகத்துடன் இணைந்தும் தனித்தும் செயற்படுவதாக குறிப்பிட்ட அவர் இம்மன்றங்கள் புத்தகம் வெளியிடுதல், வெளியீட்டு விழாக்களை ஏற்பாடு செய்தல், பயிற்சி வகுப்புக்களை நடத்துதல், பாடசாலை மாணவர்களை பயிற்றுவித்தல், சமயவகுப்புக்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்துதல், மார்க்க சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்தல், கலை இலக்கிய சமய அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு அனுசரணை வழங்குதல் கௌரவித்தல் போன்ற செயற்பாடுகள் ஊடாக இப்பிரதேச கலை இலக்கிய கலாசாரத் துறைக்கு பங்களிப்புச் செய்வதாகவும் எதிர்காலத்தில் பிரதேச செயலகம் முன்னெடுக்கும் நிகழ்வுகளுக்கும் கலாசார பேரவைக்கும் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதோடு இப்பிரதேசத்தில் இயங்கி வரும் இருமன்றங்கள் குருந்திரைப்படம் குருநாடகம் இறுவெட்டுக்களை வெளியிட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பிரதேச செயலாளர் ஜனாப் MM. நஸீர் இப்பிரதேச செயலக கலாசார செயற்பாடுகள் திருப்திகரமாக நடைபெறுவதாகவும் புத்தக வெளியீடுகள், சஞ்சிகை வெளியீடுகள், கலை விழாக்கள், பயிற்சி வகுப்புக்கள், சொற்பொழிவுகள், ஆவணப்படுத்தல், சமய கலாசார விழாக்கள் என மிகச் சிறப்பாக நடைபெறுவதாகவும் அதற்காக பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கட்கு நன்றியும் தெரிவித்தார்.

கலைமன்றங்களுக்கான ஒன்றுகூடலில் கலந்து கொண்ட கிழக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு WDU. வெலிக்கள தனது உரையில் எமது திணைக்களத்தில் 240 கலை இலக்கிய நாடக சமய மன்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள தாகவும் அவற்றுள் சில மன்றங்களே தொடர்ச்சியாக இயங்கி வருவதாகவும் இந்நிலைமை மாறி எதிர்வரும் வருடங்களில் நல்ல செயற்பாடுள்ள மன்றங்களாக எல்லா மன்றங்களும் இயங்க வேண்டும் என்பதற்காகவும், அவை பற்றி அறிந்து கொள்வதற்காகவும் நேரடியாக தான் இங்கு கலந்து கொண்டதாகவும் குறிப்பிட்ட அவர், மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் இயங்கி வரும் மன்றங்களுடன் ஒப்பிடும் போது அட்டாளைச்சேனை பிரதேசத்தில் இயங்கி வரும் மன்றங்கள் திருப்தியாக இயங்குகின்றதாக நான் உணர்கின்றேன். ஏனெனில் இங்குள்ள எல்லா மன்றங்களின் தலைவர் செயலாளர்கள் உறுப்பினர்கள் இங்கு சமூகமளித்திருக் கின்றமை அதை எடுத்துக் காட்டுவ தாகவும் இது ஒரு விசேட அம்சம் என்றும் அதற்காக சகல மன்ற உறுப்பினர்களுக்கும் கலாசார உத்தியோகத்தர்களுக்கும் தனது நன்றியை தெரிவித்து அவரது மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினார்.

மேலும் எதிர்காலத்தில் திணைக் களத்தின் செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிடும்போது கலை மன்றங்களுக குத் தேவையான பயிற்சிகளை வழங்குவதாகவும் எல்லா மன்றங்களும் ஒன்றிணைந்து இப்பிரதேசத்தின் கலை இலக்கியத் துறைக்கு பணியாற்ற வேண்டும் என்றும் குறிப்பிட்ட அவர் எதிர்காலத்தில் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்கின்ற மாகாண இலக்கிய விழாக்கள் அனைத்து சமய மக்களதும் கலாசார பண்பாட்டு நிகழ்வுகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கும் வகையில் நடைபெறும் என்றும் தெரிவித்தார். எழுத்தாளர்களின் புத்தகங்களை வெளியிட முடியாத போதிலும் அவர்கள் வெளியிடும் புத்தகங்களில் 7500/- பெறுமதியான புத்தகங்களை திணைக்களம் கொள்வனவு செய்யும் என்றும் கலைமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.

பி.ப 5.30 மணிவரை நடைபெற்ற இவ்வொன்று கூடலில் கலந்து கொண்ட வர்களுக்கு "ரியாலுல் ஜென்னா" கலாசார மன்றம் சிற்றுண்டி உபசாரங்களையும் ஏற்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகள் தொடர்பான பதிவுகள்

### மத்திய அரசுக்குரிய காணிகள் உள்ள இடங்கள்

ஆலம்குளம், தீகவாபிய, சம்புநகர், காட்டுவட்டை, கொச்சிக்காய்ச்சேனை, கனையான்குழி (கிழல், மேல்), வெள்ளக்கல் தோட்டம், முதிரையடிவட்டை, மலையடிக்கண்டம், ஆலிமுடகாடு, கறடிக்குளம், அடம்பன்குளம், கற்சேனை, உட்குளம், பத்தைமாரி, ஆறடைப்பு, வளளவாய்முன்மாரி, பொன்னன்வெளி, ஆனைவிழுந்தான், சின்ன விசாரை, பெரிய விசாரை.

### மாகாண அரசிற்குரிய காணிகள் உள்ள இடங்கள்

அட்டாளைச்சேனை- 06,07,08 கோணாவத்தை, றகுமானியாபாத் பாலமுனை - 01,02 (சின்னப் பாலமுனை) ஒலுவில் - 01 (அஷ்ரப் நகர்), 04

### 2008/04 சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2011ம் ஆண்டில் காணித்துண்டொன்றை பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமானவர்களை பதிவு செய்தல்

மேற்படி விடயம் தொடர்பாக, காணித்துண்டொன்றை பெறுவதற்கு பொருத்தமான தகுதிகளை பூர்த்தி செய்தவர்களுக்கு காணிகளை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டு அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் பகுதிகளிலிருந்து 670 விண்ணப்பங்களும் தீகவாபியில் இருந்து 600 விண்ணப்பங்களும் கிடைக்கப் பெற்றுள்ளது. அதன் அடிப்படையில் காணி பெறுவதற்கு தகுதிவாய்ந்தவர்களை தெரிவு செய்யும் பொருட்டு 19.12.2011 தொடக்கம் 28.01.2012 வரை நேர்முகப்பரீட்சை நடைபெற்று வருகின்றது. தீகவாபிய பிரதேசத்திற்கான காணிக்கச்சேரி நடைபெறவில்லை. விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுவதனால் அதற்குரிய திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

காணித்துண்டொன்றை பெறுவதற்கு பின்வரும் தகுதிகளை பூர்த்தி செய்திருக் வேண்டும்.

1. இலங்கை பிரஜையாக கிழக்கு மாகாண சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல்.
2. 18 வயதை பூர்த்தி செய்திருத்தல்.
3. தனக்கு எந்தவகையிலும் எப்பிரதேசத் திலாவது ஒரு துண்டு காணியாவது இல்லை என உறுதிப்படுத்தப்படல்.
4. விவசாயக் குடும்பத்தை சேர்ந்தவராக இருத்தல்.
5. மாத வருமானம் ரூபா.3000/-இற்கு குறைவாக இருத்தல்.
6. மாத வருமானம் ரூபா.3000/-இற்கு மேலதிகமாக இருப்பின் நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் வழங்கப்படும்.

இத்தகுதிகளை பூர்த்தி செய்பவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றி தமது விபரங்களை தெரியப்படுத்துவதன் மூலம் மேட்டுக்காணியானால் ½ எக்கரும், விவசாயக் காணியானால் 1 ஏக்கரும் பெறுவதற்கு தகுதியுடையவர் ஆவார்.

காணித்துண்டொன்றைபின் வரும் அடிப்படையில் வழங்குவது பொருத்த மானதாகும்.

1. தங்களால் பிடிக்கப்பட்ட இடத்தில் பல வருடங்களாக வசிப்பதோடு அதனை அபிவிருத்தி செய்து வருவதுடன் இதுவரையிலும் அனுமதிப்பத்திரம் எதையும் கொண்டிராதவர்கள்.
2. வருடாந்த அனுமதிப்பத்திரம் ஒன்றை கொண்டிருப்பவர்கள்.
3. காணியற்றவர்களுக்கு அரச காணிகள் அடையாளம் காணப்படும் பட்சத்தில் முன்னுரிமை அடிப்படையில் காணித் துண்டொன்றை பெற்றுக்கொடுத்தல்.

மேற்குறிப்பிட்டவற்றில்1,2 போன்ற வகுப்பில் உள்ளவர்களுக்குகாணித்துண்டொன்றை பெற்றுக்கொடுப்பதே தற்போதைக்கு சாத்தியமாகும்.

**A.M.M. றியாய்,**
பிரதான முகாமைத்துவ உதவியாளர்,
காணிப்பிரிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் - 2011ம் ஆண்டு இடம்பெற்ற பெண்கள் அபிவிருத்தி தொடர்பான நிகழ்ச்சிகள்.



- பெண்கள் தலைமைக் குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் திட்டத்திற்கு அமைய அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஒலுவில் பிரதேசம் தெரிவு செய்யப்பட்டு அங்குள்ள 10 பெண் தலைமைக் குடும்பங்களுக்கு பண்பொருள் உற்பத்தியினை மேற் கொள்ளும் உதவி வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் உதவி பிரதேச செயலாளர் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் நிவாரண சகோதரி, சமூர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

- பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் தேசிய ரீதியில் 2011.11.15 தொடக்கம் 2011.12.10 வரை சகல பிரதேச செயலக பிரிவுகளிலும் இடம்பெற்றது. இந்த அடிப்படையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திலும் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தொடர்பான ஒருநாள் கருத்தரங்கு இடம்பெற்றது. இந்நிகழ்வில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மகளிர் சங்க அங்கத்தவர்கள் கிராம உத்தியோகத்தர்கள் பங்கு கொண்டனர். வளவாளர்களாக பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, உளநல மருத்துவர், சட்டத்தரணி, மார்க்க அறிஞர்கள், பிரதேச செயலாளர், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் பங்கு பற்றினர்.

- ஆரம்ப பராய சிறுவர் அபிவிருத்தி வாரம் 2011.12.16 தொடக்கம் 2011.12.23ம் திகதிவரை தேசிய ரீதியில் நடைபெற்றது. இவ்வாரத்தை சிறப்பாக நடைமுறைப் படுத்தும் வகையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் பின்வரும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

1. ஆரம்ப பிள்ளைப்பராமரிப்பு நிலைய ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு
2. கர்ப்பிணிப்பெண்கள், புதிய திருமண தம்பதிகளுக்கான எதிர்கால தலைமுறைகளின் வாழ்வு தொடர்பான கருத்தரங்கு.
3. பாலர் பாடசாலை மாணவர்களை சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லும் நிகழ்வு.
4. வீடுகளில் பராமரிக்கப்படும் 1-4 வயதுப் பிள்ளைகளின் உள,உடல் பராமரிப்பு தொடர்பாக பெற்றோருக்கு அறிவூட்டும் நிகழ்வு.

இந்நிகழ்வுகளை பிரதேச சுகாதார அதிகாரி, சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், உளவளத்துணையாளர் போன்றவர்கள் வளவாளர்களாக பங்கு பற்றி நடத்தினர். இந்நிகழ்வு மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தரின் தலைமையில் பிரதேச செயலாளரின் ஆலோசனையின் பேரில் இடம் பெற்றது.

**M.Y. மின்னதுல் சுஹீரா**
**மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமநெகும வேலைத்திட்டத்தின் கீழ் பிரதேச அபிவிருத்தி செயற்பாடுகள்

*-உதவி திட்டப்பணிப்பாளர்-*



அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் மகிந்த சிந்தனையின் அடிப்படையில் கிராமங் களின் அடிப்படைத் தேவைகளை அடையாளங் கண்டு அரசினால் மேற்கொள்ளப்படும் கமநெகும வேலைத் திட்டத்தின் கீழ் எமது பிரதேச செயலகத்திற் குட்பட்ட அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், திராய்க்கேணி, தீகவாபிய போன்ற பிரதேசங்களில் அரசாங்கத்தின் கமநெகும அபிவிருத்தி திட்டத்தின் நிதியிலிருந்து ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள் ளப்படுகின்றது.

இதற்கமைய கடந்த 2010ம் ஆண்டில் கமநெகும திட்டத்தின் கீழ் வீதி அபிவிருத்தி, பாடசாலை அபிவிருத்தி, மையவாடி மதில் அமைத்தல் போன்ற வற்றிற்கு 32 மில்லியனும் கமநெகும விசேட வேலைத் திட்டத்தின் கீழ் வீதி அபிவிருத்திற்கு ரூபா 1,700,000/- வழங்கப்பட்டு அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் 2011 நடப்பு ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் விவசாய கிணறுகள் அமைத்தல், குழாய் நீர் விஸ் தரிப்பு, மகப்பேற்று கிளினிக் நிலைய புனர் நிர்மானம், ஆரம்ப பாடசாலை அபிவிருத்தி, பாடசாலைகளில் மலசல கூடம் அமைத்தல் போன்றவற்றிற்கு ரூபா 4,200,000/-ம் கமநெகும விசேட வேலைகளாக கால்வாய் அமைத்தல், மதகு அமைத்தல் போன்றவற்றிற்கு 4,000,000/- ரூபாவும் வழங்கப்பட்டு அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

திவிநெகும திட்டத்தின் கீழ் 4800 பயனாளிகளுக்கு மனைப்பொருளாதார அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கோழிவளர்ப்பு, வீட்டுத்தோட்டச் செய்கை போன்றவற்றிக்கு 7,100,000/- ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

பிரதேச மட்டத்தில் மக்களின் தேவைகளை கருத்திற்கொண்டு இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதால் சகல கிராமங்களும் அபிவிருத்தி அடையக் கூடியதாக உள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டாளைச்சேனை விளையாட்டுத்துறையில் மற்றுமொரு வளர்ச்சி - 2011

அட்டாளைச்சேனை பிரதேசம் விளையாட்டுத் துறையில் சென்ற ஆண்டுகளைப்போன்று 2011ம் ஆண்டு மிக முக்கியமான ஆண்டாக வளர்ச்சியடைந்துள்ளது. அட்டாளைச் சேனை தேசிய பாடசாலையின் மாணவன் MIM. மிற்றான் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய விளையாட்டு விழாவில் நீளம் பாய்தலில் 7.09 M பாய்ந்து மூன்றாம் இடத்தினை பெற்றுக் கொண்டார் மேலும் இதே மாணவன் தேசிய இளைஞர் மன்றத்தினால் நடத்தப்பட்ட தேசியமட்டப்போட்டியில் நீளம் பாய்தலில் 7.04M பாய்ந்து முதலாம் இடத்தைப் பெற்று தேசிய இளைஞர் மன்றத்தில் சாதனை படைத்ததோடு கிழக்கு மாகாணப் போட்டியில் 6.87M பாய்ந்து மாகாணமட்ட மைதான வீரராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இச் சாதனைகள் அட்டாளைச்சேனை பிரதேசத்தின் விளையாட்டுத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சிகளாகும்.

மேலும் இப்பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கு கிழக்குமாகாண வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர்ப்பாசன, கிராமிய மின்சார அமைச்சர் கௌரவ. MS. உதுமாலெவ்வை அவர்களின் 2011ம் ஆண்டின் நிதியிலிருந்து ரூபா 100,000/- பெறுமதியான கடின பந்து கிறிக்கட் உபகரணங்கள் வழங்கப்பட்டது. இவ்விளையாட்டு உபகரணங்கள் பாலமுனை அல் - அறபா விளையாட்டுக் கழகத்திற்கும் பவாட் விளையாட்டுக் கழகத்திற்கும் வழங்கப் பட்டுள்ளது. மேலும் பாராளுமன்ற உறுப்பினர் HMM. ஹரீஸ் அவர்கள் 50,000/- ரூபா நிதியினை பாலமுனை "ட்ரைஸ்டார்" விளையாட்டுக் கழகத்திற்கு ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

விளையாட்டுக் கழகங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கமாக பிரதேசத்திலுள்ள சகல விளையாட்டுக் கழகங்களையும் புனரமைப்பு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகிறது. இதுவரை 2011/2012ம் ஆண்டிற்காக 20 விளையாட்டுக் கழகங்கள் புனரமைக்கப் பட்டுள்ளதோடு 2012ம் ஆண்டின் விளையாட்டு விழாவை சிறப்பாக நடாத்துவதற்கு அதற்குரிய விண்ணப்பப் படிவங்கள் சேகரிக்கப்பட்டு ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

## அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் 2011 நடைபெற்ற விளையாட்டுத் துறை நிகழ்வுகள்

- விளையாட்டுக் கழகங்களுக் கிடையிலான பிரதேச மட்ட விளையாட்டு விழா 2011.04.24ம் திகதி நடைபெற்றது.
- பிரதேச செயலகங்களுக்கிடையிலான மாவட்ட விளையாட்டு விழா 2011.06.18,19ம் திகதிகளில் அட்டாளைச்சேனை பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. அத்துடன் எமது பிரதேச செயலகம் அம்பாரை மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.
- மாகாண விளையாட்டுப் போட்டிக்காக தெரிவு செய்யப்பட்ட மாவட்ட வீரர்களுக்கான பயிற்சி முகாம் 2011.07.12,13ம் திகதிகளில் அட்டாளைச்சேனை பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.
- 2011.07.16,17ம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெற்ற மாகாண விளையாட்டுப் போட்டியில் அம்பாரை மாவட்டம் மெய்வல்லுனர் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. இதில் அட்டாளைச்சேனை பிரதேச வீரர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். இப்போட்டியில் 4 முதலாம் இடமும் 3 மூன்றாம் இடமும் கிடைக்கப்பெற்றது.
- 2011.09.08,09,10ம் திகதிகளில் நடைபெற்ற தேசிய விளையாட்டு விழாவில் கிழக்கு மாகாணம் சார்பாக அட்டாளைச்சேனை பிரதேச செயலக வீரர்கள் 8பேர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

S.L. தாஜுதீன்
விளையாட்டு உத்தியோகத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறபு எழுத்தணிப் பயிற்சி வகுப்பு




**அ**ட்டாளைச்சேனை பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் நடத்தப்பட்ட அறபு எழுத்தணிப் பயிற்சி வகுப்பு அண்மையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத் தில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலக பிரிவில் உள்ள பாடசாலைகள் மற்றும் அறபு மத்ரசாக்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவ மாணவிகள் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு அறபு எழுத்தணி பற்றிய அடிப்படை அறிவுகளை பெற்றுக் கொண்டனர்.

இப்பயிற்சி வகுப்பில் அறபு எழுத்துக் களின் அறிமுகம், அறபு எழுத்துக்களை எழுதும் முறை, அறபு எழுத்தணிக் கருவிகள், உபகரணங்கள், அவற்றினை பயன்படுத்தும் அமைப்பு முறைமைகள், உபகரணங்களை சரியான நுட்பத்துடன் பயன்படுத்துவதனூடாக வேறுபட்ட அறபு எழுத்துக்களை உருவாக்கும் நுட்பங்கள் பற்றி பயிற்சிகள் வழங்கப் பட்டன.

மேற்படி பயிற்சியில் பங்குபற்றியவர்கள் தமது கருத்துக்களை தெரிவிக்கையில் பல நுட்பங்கள் நிறைந்த அழகுணர்ச் சிகள் வெளிப்படுகின்ற இவ் எழுத்துக் கலைப்பயிற்ச்சி பற்றிய அறிவு இதற்கு முன்னர் நாம் எங்கும் கற்கவில்லை என்று குறிப்பிட்டதோடு, அறபு மத்ரசாக்களில் ஏழு வருடங்கள் அறபு மொழி பயின்றிருப்பினும் முறையாக அறபு எழுத்துக்களை எழுதும்போது பல வடிவங்களில் அமைந்த அறபு எழுத்தணியை உருவாக்கும் கலை அறிவை இப்பயிற்சி வகுப்பில் பெற்றுக் கொண்டோம் என்றும் இதற்கு முன்னர் யாரும் அறிமுகப்படுத்தாத இப்பயிற்சி வகுப்புக்களை ஏற்பாடு செய்தமைக்காக நன்றிகளையும் பாராட்டுதல் களையும் தெரிவித்தனர். பிரதேச செயலாளர் எம்.எம்.நசீர், உதவிப்பிரதேச செயலாளர் ஏ.எம். அப்துல் லத்தீப், முன்னாள் உதவி அரசஅதிபர் இப்றாலெவ்வை, கணக்காளர் நஜ்முடீன் ஆகியோர் பயிற்சியை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுச்சீட்டு (Pass Port) ஒன்றை இலகுவாக பெற்றுக் கொள்வது எப்படி?

உலகிலுள்ள எந்த நாட்டவரும் தான் பிறந்த (வசிக்கின்ற) நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு பயணம் செய்ய வேண்டுமாயின் கடவுச்சீட்டோ அல்லது அதற்கு ஒத்த ஆவணமோ இன்றி பயணம் செய்ய முடியாது.

அப்படியானால் பயணம் செய்வதற்கு இலகுவில் கடவுச்சீட்டு ஒன்றை பெற்றுக் கொள்வது எப்படி என்ற கேள்வி எழுகின்றது.

கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் எமக்குப் பல வழிமுறைகளை செய்து தந்துள்ளது.

01. நாம் வசிக்கின்ற பிரதேசத்தில் பிரதேச செயலகத்தினூடாக விண்ணப்பத்தைப் பெற்று பூர்த்தி செய்து அனுப்புதல் (கிழக்கு மாகாண பிரதேச செயலகங்களினூடாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் கண்டி பிராந்திய காரியாலயத்திற்கு அனுப்பப்படுகிறது)

02. தலைமைக் காரியாலயத்திலோ அல்லது கிளைக்காரியாலயங்களி லோ (கண்டி, மாத்தறை, அநுராதபுரம்) சாதாரண கட்டணத்துடன் விண்ணப்பத்தை நேரடியாக ஒப்படைத்தல்.

03. தலைமைக்காரியாலயத்தில் மாத்திரம் விசேட கட்டணத்தில் (அனைத்துலக நாடுகளுக்கு 7500/- மத்திய கிழக்கு நாடுகளுக்கு 2500/-) ஒரே நாள் சேவையினூடாக பெற்றுக்கொள்ளல்.

இதற்கு முதலில் நாம் விண்ணப்பப் பத்திரத்தை பூர்த்தி செய்து கொள்வது பற்றி தெளிவாக அறிந்து கொள்வது மிக முக்கியமானதாகும்.

16 வயதிற்கு மேற்பட்டவர்கள் தனியாக விண்ணப்பப்பத்திரத்தை பூர்த்தி செய்து கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இவர்களது விண்ணப்பப் பத்திரங்களை பிரதேச செயலகத்தினூடாக விண்ணப்பிப்பதாயின் விண்ணப்பப் பத்திரத்தை பூர்த்தி செய்வதற்கு

I. 3 புகைப்படம் (இரு காதுகளும் தெளிவாகத் தெரிதல் வேண்டும்)

II. அடையாள அட்டையின் நிழற்பிரதி (கிராம உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)

III. பிறப்புச்சான்றிதழின் நிழற்பிரதி (மூலப்பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

IV. கணவனின் பெயரை தன்பெயரோடு இணைத்துக்கொள்ள வேண்டுமாயின் விவாகப்பதிவின் மூலப்பிரதியும், நிழற்பிரதியும்

குறிப்பு (01)

விண்ணப்பப்பத்திரத்தை பிரதேச செயலகங்களிலிருந்து பெற்று தாமே சுயமாக கையெழுத்தினால் பூரணப்படுத்திக் கொள்ளலாம். இதற்காக எந்த முகவரையும் நாடி பணத்தை வீணடிக்கத் தேவையில்லை மேலும் மொழி பெயர்ப்புப் பிரதியோ, கிராம உத்தியோகத்தரின் வதிவிடச்சான்றிதழோ அவசியமேயில்லை. (மேலதிக தகவல்களை பிரதேச செயலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்)

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை சமாதான நீதவானொருவரின் ஒப்பத்தோடு பதவி முத்திரையிடப்பட்டு பிரதேச செயலகத்தில் ஒப்படைத்து அனைத்துலக நாடுகளுக்காக 2500/- உம், மத்திய கிழக்கு நாடுகளுக்கு 1000/- உம் (வழங்கப்பட்ட திகதியிலிருந்து 10 வருடங்களுக்குற்பட்ட கடவுச்சீட்டு தொலைந்து மீள விண்ணப்பிப்பதாயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ் பதிவேடு மேலதிகமாக 10,000/- உம் செலுத்த வேண்டும்) பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நேரடியாக தலைமைக்காரியாலயத்திலோ, கிளைக்காரியாலயங்களிலோ ஒப்படைப் பதாயின் எந்தஆவணமும் அத்தாட்சிப் படுத்தப்படவேண்டிய அவசியமில்லை.


16 வயதுக்குட்பட்டவர்களுக்கு கடவுச் சீட்டொன்றை தனியாகவோ அல்லது தாய்/ தந்தையின் கடவுச் சீட்டிலோ மற்றவரின் சம்மதத்துடன் இணைத்துக் கொள்ளலாம். (உச்சமாக 06 பிள்ளைகளை இணைத்துக் கொள்ளலாம்) இதற்காக பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்.

- I. தாய்/தந்தையின் பிறப்புப் பதிவு (மூலப்பிரதி)
- II. அடையாள அட்டையின் நிழற்பிரதி
- III. விவாகப் பதிவு (மூலப்பிரதி)
- IV. பிள்ளைகளின் பிறப்புப் பதிவு (மூலப்பிரதி)
- V. தாய் /தந்தை விவாகரத்து பெற்றிருப்பின் அதற்கான சட்ட பூர்வமான ஆவணம்
- VI. புகைப்படம் 3 (ஒவ்வொருவரினதும்)
- VII. தாய்/தந்தையின் சம்மதக் கடிதம் (தாய் /தந்தை வெளிநாட்டில் இருப்பவராயின் அந்நாட்டிலுள்ள இலங்கை தூதரகத்தினால் சம்மதக் கடிதம் உறுதிப் படுத்தப்படல் வேண்டும்)
- VIII. தாய்/தந்தையின் கடவுச் சீட்டில் பிள்ளைகளின் புகைப்படம் இணைக்கப்படாதவரின் கடவுச் சீட்டின் 06ம் பக்கத்தின் (பிள்ளைகளை இணைக்கும் பக்கம்) பிரதி

## குறிப்பு (02)

விண்ணப்பப்படிவத்தோடு இவ்வாவணங் களை இணைத்து தலைமைக் காரியாலயத்திலோ அல்லது கிளைக்காரி யாலயங்களிலோ நேரடியாக ஒப்படைப்பதன் மூலம் வீண் தாமதங்களையும், சந்தேகங்களையும் போக்கி விரைவில் கடவுச்சீட்டை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும், கடவுச் சீட்டுக்கு விண்ணப்பிப்பவர்கள் தாமாகவே விண்ணப்பங்களை எடுத்துச் செல்வது கட்டாயமாகும்.

- மீரா மர்சூக் -



சமுர்த்தி பயனாளிகளின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல்

படம்: ரீ.கே.றஹ்மத்துல்லா SDO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அபிவிருத்தி

இப்பிரதேச செயலகப்பிரிவில் 29 கிராம அபிவிருத்தி சங்கங்களும், 22 மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களும் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளது. எல்லா கிராம அபிவிருத்தி சங்கங்களும் தங்களது வரையறுக்கப்பட்ட பிரதேசங்களுக்குள் சமூக மேம்பாட்டுத்திட்டங்களை செயற்படுத்திக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று எல்லா மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் நியாப், நெக்டெப், DCB கிராம அபிவிருத்திச் திணைக்களம் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்க நிதியுதவிகளுடன் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தி வருகின்றன. தொழிலற்ற யுவதிகளுக்கு அவ்வப்பிரதேசத்திலுள்ள மூலவளங்களுக் கேற்ப நுன்கடன்களை வழங்கி இப்பிரதேசத்திலுள்ள சகல யுவதிகளும் தாய்மார்களும் சுயதொழிலில் ஈடுபட்டு தத்தமது வருமானத்தை அதிகரித்துள்ளனர்.

கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ M. அப்துல் மஜீட் அவர்கள் அட்டாளைச்சேனை – 06 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு வாழ்வாதார மேம்பாட்டுக்காக ரூபா – 50,000 ஒதுக்கீடு செய்துள்ளார்.

பிரதேச செயலகப்பிரிவில் கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரனையுடன் நடைபெற்று வரும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் 2011ம் ஆண்டு தையல் டிப்ளோமா கற்கைநெறி பாலமுனையில் நடைபெற்றது. இக்கற்கை நெறியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 25 பயிற்சியாளர்களில் ஒரு வருட கற்கை நெறியை பூர்த்தி செய்த 21 பயிற்சியாளர்கள் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மூலமாக நடாத்தப்பட்ட பரீட்சையில் இரண்டு பேர் 'D' தரத்திலும் பதினொருபேர் 'C' தரத்திலும் எட்டுப்போர் 'S' தரத்திலும் சித்தியடைந்துள்ளனர்.

இப்பிரதேச செயலகப்பிரிவில் 2011ம் வருட தையல் சார்ந்த கற்கை டிப்ளோமா பயிற்சி நெறியை பூர்த்தி செய்த 07 யுவதிகளுக்கு கிராம அபிவிருத்தித் திணைக்களம் 07 தையல் இயந்திரங்கைள வழங்கியுள்ளது.

மேலும் இவ்வருட இறுதியில் கிழக்கு மாகாண அமைச்சர் கௌரவ எம்.எஸ். உதுமாலெவ்வை அவர்களினால் பின்வரும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

**நிதி வழங்கப்பட்ட மாதர் அபிவிருத்திச் சங்கங்கள்**

| | | |
|---|---|---|
| 01. | அட்டாளைச்சேனை – 11 WRDS | 125,000.00 |
| 02. | உதுமாபுரம் WRDS | 100,000.00 |
| 03. | ஹுசைனியா நகர் WRDS | 100,000.00 |
| 04. | ஒலுவில் அக்கரை WRDS | 100,000.00 |
| 05. | தைக்கா நகர் WRDS | 06 சிங்கர் தையல் இயந்திரம் |
| 06. | அட்டாளைச்சேனை – 02 WRDS | 06 சிங்கர் தையல் இயந்திரம் |

அல்-ஹாஜ். ஏ.பீ.ஷரீப்
கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச அபிவிருத்தி செயற்பாடுகள்

கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை அடையாளங் கண்டு, அப்பிரதேச மக்களின் அவசியத்தன்மையின் முக்கியத்துவத்தை அறிந்து அரசினால் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்ற பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவுத்திட்டம், கமநெகும, மற்றும் மாகாண சபை ஊடாக மேற்கொள்ளப்படும் பிரமாண அடிப்படையிலான வேலைத்திட்டம் போன்ற அபிவிருத்தி வேலைத்திட் டங்களினால் சமுக முன்னேற்றத்தையும் சிறந்த பலாபலன்களையும் மக்கள் அடைகின்றனர் என்பது திண்ணம்.

இதற்கமைய அட்டாளைச்சேனை பிரதேசசெயலகப் பிரிவிற்குட்பட்ட அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், தீகவாபிய போன்ற பிரதேசங்களில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்காக திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் தமது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடுகளை வழங்கியுள்ளதுடன், கிழக்குமாகாணசபை உறுப்பினர்களும், அமைச்சர்களும் பிரமாண அடிப்படையிலான வேலைத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடுகளை வழங்கியுள்ளனர்.

பாடசாலைகளில் விளையாட்டு மைதானம் அமைத்தல், நலன்புரி நடவடிக்கைகளை விருத்தி செய்தல், விளையாட்டுத்துறை மேம்பாட்டிற்காக விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல், பொது அமைப்புக்களின் வாழ்வாதார செயற்பாட்டிற்கான ஊக்குவிப்புத் திறனை விருத்தி செய்வதற்கான உதவிகள், மதஸ்தலங்களின் விருத்திற்கும், மையவாடிகளின் பாதுகாப்பிற்கான மதில்களை அமைத்தல், மற்றும் விவசாய அணைக்கட்டுக்களை திருத்தி அமைத்தல், மற்றும் பொதுக்கிணறுகள், பாதைகள், மலசலகூடம், மின்சாரம் போன்ற திட்டங்களுக்கும் இவ்வாண்டில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறான வேலைத்திட்டங்களுக்கு கடந்த 2010ம் ஆண்டு பன்முக வரவு செலவுத்திட்ட நிதியாக சுமார் 3054000/- வழங்கப் பட்டுள்ளது. இவ்வாண்டில் இவ்வேலைத்திட் டத்திற்காக சுமார் 4305000/- கிடைக்கப் பெற்றுள்ளது. இவ்வாண்டில் இப்பிரதேசத்தின் அபிவிருத்திற்காக கூடுதலான நிதி ஒதுக்கீட்டை பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பியசேன அவர்கள் வழங்கியிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இவ்வேலைகள் யாவும் பூர்த்தியடையும் நிலையிலுள்ளது.

இது தவிர கிழக்கு மாகாண சபையினால் பிரமாண அடிப்படையிலான வேலைத் திட்டத்தின் கீழ் இக்கிராமங்களின் அபிவிருத்தி வேலைகளுக்காக கிழக்கு மாகாண சபையிலுள்ள அமைச்சர்கள், உறுப்பினர்கள் சுமார் 2229000/- வரையில் வழங்கியுள்ளனர். இப்பிரதேசத்திலுள்ள மாகாண சபை அமைச்சர் கௌரவ MS. உதுமாலெப்பை அவர்களும் உறுப்பினர் கௌரவ மசூர் சின்னலெப்பை அவர்களும் கூடுதலான தொகையை ஒதுக்கீடு செய்துள்ளனர். இது தவிர பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மகிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் கொங்கிறீட் வீதிகள், பொதுக்கிணறுகள் தாய்சேய் சிகிச்சை நிலையங்கள் அமைத்தல் போன்ற அபிவிருத்தி வேலைகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

பிரதேச செயலக மட்டத்தில் மக்கள் தொகை, வறுமை இடப்பருமன் போன்றவற்றின் சாதகத்தன்மையை கருத்திற் கொண்டு ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படும் முறைமை அரசினால் கடைப்பிடிக்கப் படுவதனால் சகல கிராமங்களும் அபிவிருத்தி அடையக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**MIM. ஹபீப்**
முகாமைத்துவ உதவியாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகத்திலிருந்து...

- **உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறி**

ICTA நிறுவனத்தினால் Kalmunai Gateway நிறுவனத்தில் நடாத்தப்படுகின்ற ICDL – International Computer Driving Licence - 16 நாட்களுக்கான பயிற்சி நெறியில் 2011 - ஜூன் வரையான காலப்பகுதியில் அரச முகாமைத்துவ உதவியாளர்களான ஜனாப் MS. பாறுக் S. அஜ்மலா, கணனித் தரவுப் பதிவு இயக்குனரான ஜனாப் MAM. இஸ்ஹாக், அபிவிருத்தி இணைப்பாளரான ஜனாப் MIM. இஸ்ஹாக் அவர்களும் 2011 ஜூலை – செப்டம்பர் வரை அரச முகாமைத்துவ உதவியாளர்களான ஜனாப் M. ஜிப்ரி, ஜனாப் KMM. அன்சார், ஜனாப் M. மர்சூக், ஜனாப் AMM. றிபாய், ஜனாப் AMM. றிஸா, AG. இல்முதீன், ஜனாபா AMS. நயீமா (சமுர்த்தி முகாமையாளர்) 2011 – செப்டம்பர் நவம்பர் வரையான காலப்பகுதியில் பிரதேச செயலாளர் ஜனாப் MM. நஸீர், உதவிப் பிரதேச செயலாளர் ஜனாப் AM. அப்துல் லத்தீப், கணக்காளர் ALM. நஜிமுதீன் மற்றும் திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் ஜனாப் AL. ஹுசைன்தீன் ஆகியோர் இப்பயிற்சி நெறியில் பங்கேற்று பயிற்சியினைப் பெற்றுக் கொண்டனர்.

மேலும், திருகோணமலை முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி திணைக்களத்தில் GIZ நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற STEPS பயிற்சி நெறியில் 2011.05.30 – 2011.06.24 வரை ஜனாப் ALM. நஜீமுதீன் - கணக்காளர் அவர்களும் WSPS பயிற்சி நெறியில் 2011.11.21 – 2011.12.16 வரையான காலப்பகுதியில் ஜனாப் M. மர்சூக் - அரச முகாமைத்துவ உதவியாளர் அவர்களும் கலந்து கொண்டனர். அத்தோடு நிகழ்ச்சித்திட்ட உதவியாளராக கடமையாற்றுகின்ற ஜனாப் எஸ்.எம்.றிஜால்தீன் PRE STEPS I பயிற்சி நெறியில் 20.10.2011 தொடக்கம் 17.11.2011 வரை கலந்து கொண்டார்.

அரச உத்தியோகத்தர்களுக்கான இரண்டாம் மொழி சிங்களம் தரம் III க்கான வகுப்புக்கள் அம்பாறை மாவட்ட அரச அதிபரின் அனுமதியுடன் 2011.10.27ம் திகதி தொடக்கம் பிரதேச செயலகத்தில் நடைபெறுகின்றது.

- **நியமனம்**

ஜனாப் SL. ஜெலீல் அவர்கள் 2009.11.01ம் திகதியிலிருந்து அலுவலகப்பணியாளர் தரம் - III ற்கு நிரந்தர நியமனம் பெற்றுள்ளார்.
மற்றும் அட்டாளைச்சேனை – 17ல் கிராம நிலதாரியாகக் கடமையாற்றிய ஜனாப் SLM. அப்துல் சமட் அவர்கள் கிராம உத்தியோகத்தர் (நிருவாக) ஆக 2011.10.01ம் திகதி முதல் நியமனம் பெற்றுள்ளார்.

- **மீண்டும் சேவையில்**

சம்பளமற்ற விடுமுறையில் இலங்கைக்கு வெளியே விடுதலையில் சென்ற ஜனாப் AMM. கான் - மேலதிக மாவட்டப் பதிவாளர் அவர்கள் 2011.08.17ம் திகதி மீண்டும் தனது சேவையில் இணைந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **இடமாற்றம்**

இப்பிரதேச செயலகத்தில் அரச முகாமைத்துவ உதவியாளர் Iம் தரத்தில் கடமையாற்றிய ஜனாப் கே.எல்.ஏ.எம். றகுமத்துல்லா அவர்கள் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்கும் அரச முகாமைத்துவ உதவியாளர் IIம் தரத்தில் கடமையாற்றிய ஜனாப் எம்.ஐ.எம். ஹபீப் அவர்கள் சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்கும் சாரதி II 'அ' தரத்தில் கடமையாற்றிய ஜனாப் எம்.சீ.எம். நியாஸ் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்கும் 2012.01.02ம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

நிகழ்ச்சித் திட்ட உதவியாளராக கடமையாற்றிய ஜனாப் அலி அகமட் அவர்கள் கிழக்கு மாகாண சமூக சேவை திணைக்களத்திற்கு 2012.01.02ம் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தமன பிரதேச செயலகத்தில் திட்டமிடல் உதவிப்பணிப்பாளராக கடமையாற்றிய ஜனாப் ஏ.எல்.எம். அஸ்லம் அவர்கள் 2012.01.13ம் திகதி முதல் இப்பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

- **நிருவாக சேவை உத்தியோகத்தர்களின் இடமாற்றம்**

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் 2009.07.09ம் திகதியில் இருந்து பிரதேச செயலாளராக கடமையாற்றிய அல்ஹாஜ் எம்.எம். நஸீர் அவர்கள் 2012.01.02ம் திகதி முதல் இறக்காமம் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் 2007.01.01ம் திகதி முதல் இச்செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளராக 05 வருடங்கள் சேவையாற்றிய ஜனாப் ஏ.எம்.அப்துல் லத்தீப் அவர்கள் சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு 2012.01.11ம் திகதி தமது கடமையை பொறுப்பேற்றார்.

நிந்தவூர் பிரதேச செயலாளராக கடமையாற்றிய ஜனாப். ஐ.எம்.ஹனிபா அவர்கள் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளராக 09.01.2012ம் திகதி கடமைகளை பொறுப்பேற்றார்.

**MJ. நஸ்றீன்**
**அரச முகாமைத்துவ உதவியாளர் - II**



குறுந்திரைப்பட இறுவட்டு வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org